SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 25 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 8

மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

• புதுச்சேரி • திங்கள்கிழமை, நவம்பர் 11, 2024 • வெளியூர்: 12-11-2024, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 124 • 6 பக்கம் • ரூ.6

## கோவை கார் குண்டுவெடிப்பு என்.ஐ.ஏ. அதிகாரிகள் விசாரணை

**கோவை, நவ. 11-**

கோவை உக்கடம் பகுதியில் கார் வெடித்த சம்பவத்தில் ஜமேஷா முபின் என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்து போனார். இந்த சம்பவம் குறித்து தேசிய புலனாய்வு பிரிவு போலீசார் இதுவரை 15 பேரை கைது செய்து சிறையில் அடைத்த நிலையில் இந்த சம்பவத்தில் தொடர்புடைய பலரை போலீஸ் காவலிலும் எடுத்து விசாரித்து வருகின்றனர்.

மேலும் இந்த சம்பவத்தில் தொடர்புடையதாக கோவை உக்கடத்தைச் சேர்ந்த அபு அனீபா, பவாஸ் ரகுமான், சரண் உள்ளிட்ட 3 பேரை தேசிய புலனாய்வு பிரிவு போலீசார் கடந்த மாதம் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் கைது செய்யப்பட்ட 3 பேரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க பூந்தமல்லியில் உள்ள தேசிய புலனாய்வு சிறப்பு நீதிமன்றத்தில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் மனு தாக்கல் செய்திருந்தனர்.

மனுவை விசாரித்த நீதிபதி இளவழகன், கைது செய்யப்பட்ட 3 பேரையும் 6 நாட்கள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி அளித்தார். மேலும் போலீஸ் காவல் முடிந்து வரும் 14ந் தேதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தனர். இந்நிலையில் கார் குண்டுவெடிப்பு வழக்கு தொடர்பாக அபு அனீபா, பவாஸ் ரகுமான், சரண் ஆகியோரிடம் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் (என்.ஐ.ஏ.) விசாரணை நடத்தி வருகின்றனர். கடந்த மாதம் கைதான 3 பேரையும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் காவலில் எடுத்த நிலையில் தற்போது கோவையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

## சென்னையில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.440 குறைவு

**சென்னை, நவ. 11-**

தங்கம் விலை கடந்த அக்டோபர் மாதம் இறுதி வரை உயர்ந்து வந்தது. பின்னர் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து குறைந்து காணப்பட்டது. இடையில் ஓரிரு நாட்கள் மட்டும் விலை அதிகரித்திருந்தது.

இந்நிலையில் சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.440 குறைந்து ரூ.57 ஆயிரத்து 760க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.55 குறைந்து ரூ.7,220க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 குறைந்து ரூ.102க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாவதில் மீண்டும் தாமதம்

**சென்னை, நவ. 11-**

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 6ம் தேதி ஒரு புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக சில சாத்திய கூறுகள் நிலவியதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. ஆனால் மியான்மர் நாட்டு கடலோர பகுதியில் அப்போது நிலவி வந்த காற்றின் சுழற்சியின் காரணமாக, தமிழகத்திற்கு வர வேண்டிய அந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தடைபட்டது.

ஆனால் தற்பொழுது மியான்மர் நாட்டு கடலோரப் பகுதியில் நிலவி வந்த அந்த காற்றின் சுழற்சியானது வலுவிழந்துள்ள நிலையில், இப்போது தென்மேற்கு வங்க கடல் அருகே புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த புதிய காற்றழுத்த தாழ்வு பகுதியானது, விரைவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும். அது தமிழகத்தை நெருங்கி வந்து இன்று முதல் தமிழகத்தின் அனேக இடங்களிலும், குறிப்பாக சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் அதிக அளவிலான மழை பெய்ய வாய்ப்புகள் இருப்பதாக ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இதன்படி வங்கக்கடலில் இன்று இரவுக்குள் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு அதிகம் இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்படி அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கடுத்த 2 நாட்களில் மேற்கு திசையில், தமிழ்நாடு, இலங்கை கடலோரப்பகுதிகளை நோக்கி மெதுவாக நகரக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் இன்றுமுதல் நவ.15ம் தேதி வரை கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் இதனால் அடுத்த 5 நாட்களுக்கும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்படுவதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இன்று கடலோர மாவட்டங்களில் சில இடங்களிலும், உள்மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழையும், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாளை தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழையும், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## ராணிப்பேட்டை மாவட்டத்தில்

# ரூ.15 கோடியில் மாவட்ட விளையாட்டு வளாகம்

## துணை முதலமைச்சர் உதயநிதி அடிக்கல் நாட்டினார்

**சென்னை, நவ. 11-**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று காலை நேரு உள்விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியில் தங்கி பயிலும் அனைத்து மாணவ மாணவிகளுக்கு அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் தொகுப்பான 'சாம்பியன்ஸ் கிட்' வழங்குவதை முதற் கட்டமாக 553 மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்.

இத்தொகுப்பில் பை, நவீன தண்ணீர் பாட்டில், தசைப்பிடிப்பிற்கு ஒத்தடம் கொடுக்கும் பை, தொப்பி, கர்சீப் டவல், வேர்வை உறிஞ்சும் துண்டு, கைக்கடிகாரம் மற்றும் டீ கப் ஆகியவை இடம் பெற்றிருந்தது.

அதைத்தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் ராணிப்பேட்டை மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டும் பணிக்கும், மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ஒலிம்பிக் அகாடமி கட்டிடம் கட்டும் பணிக்கும் அடிக்கல் நாட்டி உரையாற்றினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 2023–2024ம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான அறிவிப்பில், புதியதாக உருவாக்கப்பட்ட தென்காசி, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இதில் ராணிப்பேட்டை மாவட்டத்தில் 16.06 ஏக்கரில் ரூ.15 கோடி மதிப்பில் பல்வேறு விளையாட்டு வசதிகள் கொண்ட புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் 15 மாதத்திற்குள் கட்டி முடிப்பதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது.



இவ்விளையாட்டு வளாகத்தில் நிர்வாக அலுவலக கட்டிடம், 1500 இருக்கை வசதிகள் கொண்ட கேலரி, ஓடுதளப்பாதை, கால்பந்து மைதானம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கையுந்துபந்து, கோ கோ,டென்னிஸ் ஆடுகளங்கள் மற்றும் உடைமாற்றும் அறை, ஆண், பெண் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிவறை வசதிகள் கொண்ட திறந்தவெளி விளையாட்டரங்கம் அமைக்கப்படும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலினால் உயர்திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க மேடையை அடைவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் கொண்ட ஒலிம்பிக் அகாடமி சென்னை, திருச்சி, மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில், அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2024–2025ம் ஆண்டின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான அறிவிப்பில், மதுரை மாவட்டத்தில் ஒலிம்பிக் அகாடமி அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின் ஓர் அங்கமாக, ரூ.6 கோடி அளவில் மதுரை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கபாடி மற்றும் டேபிள் டென்னிஸ் விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் தரை தளத்தில் ஒரு கபாடி ஆடுகளம், முதல் தளத்தில் 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுகளம் கொண்ட 250 இருக்கைகளுடன் கூடிய உள்விளையாட்டரங்கம் மற்றும் ஆண், பெண் உடைமாற்றும் அறைகள் கொண்ட வசதியுடன் அமைக்கப்படும்.

நவீன வசதிகளுடன் கொண்ட புதிய உடற்பயிற்சி கூடம் அமைக்கப்படும். தற்போது உள்ள திறந்தவெளி கூடைப்பந்து ஆடுகளம் செயற்கை தரையமைப்பு, பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய புதிய கூடைப்பந்து ஆடுகளமாக புனரமைக்கப்படும்.

தற்போது உள்ள திறந்தவெளி டென்னிஸ் ஆடுகளம் செயற்கை தரையமைப்பு, பார்வையாளர் இருக்கைகளுடன் கூடிய புதிய டென்னிஸ் ஆடுதளமாக மாற்றியமைக்கப்படும்.

## 'உலக நாயகன்' என அழைக்க வேண்டாம்.. பட்டங்களை துறந்த கமல் ஹாசன்: திடீர் அறிவிப்பு

**சென்னை, நவ. 11-**

தமிழ் சினிமாவின் உச்சநட்சத்திரமான கமல் ஹாசன் கடந்த 2018 ஆண்டு மக்கள் நீதி மையம் என்ற அரசியல் கட்சியை தொடங்கினார். அரசியலில் குதித்தாலும் சினிமாவிலும் கவனம் செலுத்தி வரும் கமல் அடுத்தடுத்து படங்களில் கமிட்டாகி நடித்து வருகிறார்.

நடிப்பிற்காக சர்வதேச அளவில் விருதுகளை வாங்கிய கமல், உலகநாயகன் என்ற அடைமொழியுடன் ரசிகர்களால் அழைக்கப்படுகிறார். கமல் 10 கெட் அப்களில் நடித்த கே.எஸ். ரவிக்குமார் இயக்கிய தசாவதாரம் படத்தில் 'உலக நாயகனே' என்று தொடங்கும் பாடலே இடம்பெற்றிருக்கும். இந்நிலையில் உலகநாயகன் உள்ளிட்ட பட்டங்களை குறிப்பிட்டு தன்னை யாரும் அழைக்க வேண்டாம் என்று திடீர் அறிவிப்பு ஒன்றை கமல்ஹாசன் வெளியிட்டுள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள அறிக்கை கீழ்வருமாறு,

என் மீது கொண்ட அன்பினால் 'உலக நாயகன்' உட்பட பல பிரியம் ததும்பும் பட்டங்களால் என்னை அழைக்கிறீர்கள், மக்கள் கொடுத்து, சக கலைஞர்களாலும் ரசிகர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இப்படிப்பட்ட பாராட்டுச் சொற்களால் மகிழ்ந்திருக்கிறேன்; உங்கள் இந்த அன்பால் நெகிழ்ந்துமிருக்கிறேன். உங்களின் பிரியத்தின் மீது எனக்கு மாறாத நன்றியுணர்வும் உண்டு.

சினிமாக் கலை, எந்த ஒரு தனி மனிதனையும் விட பெரியது. அந்தக் கலையில் மேலும் மேலும் கற்றுக்கொண்டு பரிணாமம் அடைய விரும்பும் ஒரு மாணவன் தான் நான், பிற கலைகளைப் போலவே சினிமாவும் அனைவருக்குமானது; அனைவராலுமானது, திறமையான கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், நல்லரசிகர்கள் ஒன்றிணைந்துதான் சினிமா உருவாகிறது.

கலையை விடக் கலைஞன் பெரியவன் இல்லை என்பது என் ஆழமான நம்பிக்கை. கற்றது கைம்மண் அளவு என்பதை உணர்ந்தவனாகவும், தொடர்ச்சியான முன்னகர்வில் நம்பிக்கை உழைத்துயர்பவனாகவும் இருப்பதே எனக்கு உவப்பானது. அதனால்தான் நிறைய யோசனைக்குப் பிறகு ஒரு முடிவுக்கு வர நேர்ந்தது. மேலே குறிப்பிட்டது போன்ற பட்டங்களையும் அடைமொழிகளையும் வழங்கியவர்களுக்கு எந்த மரியாதைக் குறைவும் வந்துவிடாத வண்ணம் அவற்றைத் துறப்பது என்பதே அது.

எனவே, என் மீது பிரியம் கொண்ட அனைவருக்குமாக ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். இனிவரும் காலத்தில் என் ரசிகர்களும் ஊடக நண்பர்களும் திரைத்துறையைச் சார்ந்தவர்களும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தொண்டர்களும், சக இந்தியர்களும் என்னை கமல்ஹாசன் என்றோ கமல் என்றோ குறிப்பிட்டால் போதுமானது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இத்தனை காலமாக நீங்கள் என் மேல் காட்டி வரும் அன்புக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவிக்கிறேன். மனிதன் என்கிற ஸ்தானத்திலிருந்தும், சினிமாவை நேசிக்கிற நம் அனைவரிலும் ஒருவனாகவே நான் இருக்க வேண்டும் என்கிற என் எண்ணத்தில் இருந்தும் இந்த வேண்டுகோள் வெளிப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் நான்.. என்று தெரிவித்துள்ளார்.

## நடிகர் டெல்லி கணேஷின் உடல் நெசப்பாக்கம் மின் மயானத்தில் தகனம்

**சென்னை, நவ. 11-**

மூத்த நடிகர் டெல்லி கணேஷ், வயது முதிர்வு மற்றும் உடல்நல பிரச்சினைகள் காரணமாக நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டிலேயே மரணம் அடைந்தார். அவருக்கு வயது 80. இதையடுத்து அவரது உடல் அஞ்சலிக்காக வீட்டில் வைக்கப்பட்டு இருந்தது. அவரது உடலுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள், சினிமா பிரபலங்கள், பொதுமக்கள் என பலரும் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து டெல்லி கணேஷ் உடலுக்கு இந்திய விமானப்படை சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. அவரது இல்லத்திற்கு நேரில் சென்ற விமானப்படை வீரர்கள், டெல்லி கணேஷ் உடல் மீது தேசியக்கொடி போர்த்தியும், மலர் வளையம் வைத்தும் மரியாதை செலுத்தினர். திரைத்துறைக்கு வருவதற்கு முன்பாக டெல்லி கணேஷ், இந்திய விமானப்படை அதிகாரியாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து டெல்லி கனேஷின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. சென்னை



ராமாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டு நெசப்பாக்கம் மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. நண்பர்கள், உறவினர்கள் கண்ணீர் மல்க அவரின் இறுதிப் பயணத்தில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# மேலாண்மை இயந்திரங்கள் மானிய திட்டத்தின் மூலம் வாழ்வாதாரத்தை உயர்த்திய விவசாயிகள்

## முதல்வருக்கு கன்னியாகுமரி மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி







**கன்னியாகுமரி, நவ. 11-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டின் கடைகோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, பிற மாநிலங்களே வியந்து பாராட்டும் வகையில், இது நமது அரசு என்று பொதுமக்கள் அனைவரும் சொல்லும் அளவிற்கு சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறையின் சகோதாரன துறையான வேளாண்மை பொறியியல் துறை கீழ் வேளாண் இயந்திரமயமாக்குதல் திட்டம், மானிய விலையில் விவசாயிகளுக்கு மின் மோட்டர் பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம், நில மேம்பாட்டு திட்டம், சிறு பாசனத்திட்டம், வேளாண் விளைப்பொருட்களை மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்கள் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏற்றத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம் வேளாண்பொறியியல் துறை சார்பில் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை மதிப்புக் கூட்டி, சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக விவசாயிகளுக்கு மானியத்தில் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களான மரச்



செக்கு, SS செக்கு. தானியங்கி தேங்காய் உரிக்கும் கருவி. தானியங்கள் தூளாக்கும் கருவி (மாவு அரைக்கும் இயந்திரம்), ஒருங்கிணைந்த சிறிய வகை நெல் அரவை இயந்திரம், கால்நடை தீவனம் அரைக்கும் இயந்திரம், நெல் உமி நீக்கும் இயந்திரம் போன்ற பலவகையான இயந்திரங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் மற்றும் வேளாண்மை இயந்திர மயமாக்குதல் உப இயக்கம் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு மானியத்தில் அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரம் திட்டத்தின் வாயிலாக சிறு, குறு, பெண் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு மொத்த விலையில் 60 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இதர விவசாயிகளுக்கு மொத்த விலையில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு சிறு குறு விவசாயி சான்றிதழ் சமர்ப்பிக்கும் பட்சத்தில் கூடுதலாக 20 சதவிகிதம் மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை குறியீடு வழங்கப்படவில்லை விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் அகஸ்தீஸ்வரம், தோவாளை, ராஜாக்கமங்கலம் ஆகிய வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (நாகர்கோவில்), 833, தொழிற்பேட்டை, கோணம் முகவரியிலும், தக்கலை, குருந்தன்கோடு. முஞ்சிறை, கிள்ளியூர், திருவட்டார். மேல்புறம் ஆகிய வட்டாரங்களை சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (தக்கலை). பனங்காளவிளை, அழகிய மண்டபம், என்ற முகவரியில் நேரில் சென்று விண்ணபப்பங்களை வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2020-21ம் நிதியாண்டில் விவசாயிகளுக்கு மானியத்தில் அறுவடைக்குப் பிந்தைய தொழில் நுட்பம் மற்றும் மேலாண்மை இயந்திரங்களான மரச் செக்கு, SS செக்கு, தானியங்கி தேங்காய் உரிக்கும் கருவி, தானியங்கள் தூளாக்கும் கருவி (மாவு அரைக்கும் இயந்திரம்), ஒருங்கிணைந்த சிறிய வகை நெல் அரவை இயந்திரம், கால்நடை தீவனம் அரைக்கும் இயந்திரம், நெல் உமி நீக்கும் இயந்திரம் உள்ளிட்ட இயந்திரங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.9.33 லட்சம் மானியத்திலும், 2021-22ம் நிதியாண்டில் 10 பயனாளிகளுக்கு ரூ.8.42 இலட்சம் மானியத்திலும், தொடர்ந்து நிதியாண்டில் 16 பயனாளிகளுக்கு ரூ.10.92 லட்சம் மானியமும். 2022-23ம் 2023-24 நிதியாண்டில் 1 பயனாளிகளுக்கு ரூ.1.80 லட்சம் மானியத்திலும் வழங்கப்பட்டுள்ளது. என்றார்.

நிறைந்தது மனது நிகழ்ச்சியின் கீழ் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை இயந்திரங்கள் மானியத்தில் பயனடைந்த பூச்சிக்காட்டுவிளை பகுதியை சேர்ந்த ஜெபதாஸ் தெரிவிக்கையில்: நான் ஒரு விவசாயி. திக்கணங்கோடு பூச்சிக்காட்டுவிளை பகுதியில் வசித்து வருகிறேன். நான் வேளாண்மை பொறியியல் துறை வாயிலாக மானியத்தில் 480 சதுர அடியில் சோலார் சூரிய உலர்த்தி கூடாரம் அமைந்துள்ளேன். மேலும் தமிழ்நாடு அரசு அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை இயந்திரங்கள் மானிய திட்டத்தின் கீழ் பல்வேறு இயந்திரங்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதாக அறிந்துக்கொண்டேன். உடனடியாக அருகில் உள்ள உதவி செயற்பொறியளார் அலுவலத்தில் மர செக்கு இயந்திரம் வேண்டுமென விண்ணப்பித்தேன்.

என்னுடைய விண்ணபத்தினை பரிசீலித்து, எனக்கு மர செக்கு இயந்திரம் வழங்கப்பட்டது. இவ்வியந்திரத்தின் வாயிலாக எள், தேங்காய், கடலை ஆகியவற்றை சோலார் சூரிய கூடார உலர்த்தி மூலம் உலர வைத்து, பின் அரைத்து செக்கு எண்ணெய் உற்பத்தி செய்து வருகிறேன். நான் உற்பத்தி செய்யும் செக்கு எண்ணையை 500 மி.லிட்டர் மற்றும் 1 லிட்டர் அளவில் பேக்கிங் செய்து அருகில் உள்ள கடைகள், வணிக வளாகங்கள் மற்றும் வீடுகளுக்கு நேரடியாக சென்று விற்பனை செய்து வருகிறேன். இதனால் என்னுடைய அன்றாட வாழ்வாதாரத்திற்கும், வருமானத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நிறைந்த மனதுடன் எனது நெஞ் சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுப்பு:-
**ஜாண் ஜெகத் பிரைட்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**செல்வலெட் சுஷ்மா,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.



# கேம்ஃபோர்டு சர்வதேச பள்ளி ஆண்டு விழா




**கோவை, நவ. 11-**

கோவை மணியகாரம்பாளையம் பகுதியில் உள்ள கேம்ஃபோர்டு சர்வதேசப் பள்ளியில் 15வது பள்ளி ஆண்டு விழா மற்றும் நிறுவனர் தின விழா கேம்ஃபோர்டியன் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. டைனமிக்ஸ் 2024 எனும் தலைப்பில் நடைபெற்ற இதன் துவக்க விழாவில் பள்ளியின் தலைவர் அருள் ரமேஷ், தாளாளர் பூங்கோதை அருள் ரமேஷ் ஆகியோர் தலைமை தாங்கினர். விழாவில் முன்னதாக பள்ளியின் கடந்த ஆண்டிற்கான செயல்பாடுகளை முதல்வர் பூணம் சியால் வாசித்தார். விழாவிற்கு சிறப்பு விருந்தினராக இந்திய இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற முன்னாள் மேஜர் ஜெனரல் இந்திரபாலன் கலந்துகொண்டு மாணவ, மாணவிகளிடையே உரையாற்றினார். அப்போது பேசிய அவர், உலக நாடுகள் வரிசையில் இளைஞர்கள் அதிகம் உள்ள நாடாக இந்தியா இருப்பதாக குறிப்பிட்ட அவர், இந்தியா நாட்டின் முன்னேற்றத்தில் இளம் தலைமுறையினரின் பங்கு அதிகம் இருப்பதாக கூறினார். தொடர்ந்து அவர் கேட்டு கொண்டதிற்கு இணங்க இந்திய ராணுவத்திற்கு மரியாதை செலுத்தும் விதமாக அரங்கில் கூடியிருந்த மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் எழுந்து நின்று ஜெய் ஹிந்த் என முழக்கமிட்டனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறந்த மதிப்பெண்கள் மற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

விழாவில் மாணவ, மாணவிகள் இணைந்து நடத்திய கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

# மரக்கன்று நட்ட அமைச்சர்



பால்வளத்துறை மற்றும் கதர்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் திருப்பூர் மாநகராட்சி, வீரபாண்டி பிரிவில் திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய அலுவலகத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள். உடன் ஆவின் நிர்வாக இயக்குநர் வினித், மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ்.

# குற்றியார், தச்சமலை பகுதிகளை ஆட்சியர் ஆய்வு



**கன்னியாகுமரி, நவ. 11-**

கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட குற்றியார், தச்சமலை உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து தரப்பட்ட மக்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தப்படும் அனைத்து நலத்திட்டங்களும் உடனடியாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் பேச்சிப்பாறை ஊராட்சிக்குட்பட்ட குற்றியார் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகள் மற்றும் தேவைகள் கேட்டறியப்பட்டது. மேலும் அங்கு செயல்படுத்தப்பட்டு வரும் படகு போக்குவரத்து வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து குற்றியார் அரசு நடுநிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து தச்சமலை பகுதியில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் தச்சமலை குக்கிராமத்தை சார்ந்த பள்ளியில் படிக்கும் குழந்தைகளுடன் கலந்துரையாடப்பட்டது. தொடர்ந்து தச்சமலை அரசு தொடக்கப்பள்ளியில் செயல்படுத்தப்பட்டு வரும் எழுத்தறிவு திட்டம் வாயிலாக கல்விபெறும் முதியோர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்டஇயக்குநர் பாபு, மாவட்ட ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை அலுவலர் கனகராஜ், ஆசிரியர்கள், பொதுமக்கள், துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டார்கள்.

# விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டர் வழங்கல்



மண்ணாடிப்பட்டு தொகுதி சந்தை புதுக்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் விவசாயிகளுக்கு மானிய விலையில் டிராக்டரை வழங்கிய உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், தொடர்ந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் டிராக்டர் ஓட்டி விவசாயிகளுடன் மகிழ்ந்தார்.

# ஆழ்துளை கிணற்றில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கும் பணி



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், படியூர் ஊராட்சி, இந்திரா நகரில் ஆழ்துளை கிணற்றில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ்.

# குற்றவியல் நடுவர் நீதிமன்றம் திறப்பு



திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தினை சென்னை உயர்நீதிமன்ற முதன்மை நீதிபதி ஸ்ரீராம் திறந்து வைத்ததை தொடர்ந்து, செய்யாறு துணை நீதிமன்றத்தினை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அருகில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் பாரத சக்கரவர்த்தி, குமரேஷ் பாபு, மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி மதுசூதனன், மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுதாகர்.

# மாணவர்கள் திறனாய்வு தேர்வு பயிற்சி




தூத்துக்குடி மாவட்டம், சுப்பையா வித்யாலயா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தேசிய வருவாய்வழி மற்றும் திறன் படிப்புதவித் தொகைத் தேர்வு திட்டம், தேசிய அடைவுத் திறன் மற்றும் தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறனாய்வு தேர்வு குறித்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் இருந்து ஆறு முதல் ஒன்பது வரை கையாளக்கூடிய ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறையை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

# Despite Varun Chakravarthy's wrong'un masterclass South Africa level T20 series 1-1

**New Delhi, Nov.11-**

Pulling Arshdeep Singh through the square-leg fence, Tristan Stubbs roared in delight. His sidekick in a memorable heist at Gqeberha, Gerald Coetzee, swiped the air in anger before the two locked in a mid-pitch embrace. No victory from the jaws of defeat against India could reduce the pain of their World Cup final loss a few months ago in Barbados. But the win could offer a fleeting respite, as the hosts rallied back from 86 for seven to knock off 42 runs off 20 balls to inflict a series-levelling win, chasing 125, putting to waste a supreme exhibition of white-ball spin bowling by Varun Chakravarthy (5/17). Varun's 13th over, wherein he consumed two finishers of devastating nature, Heinrich Klaasen and David Miller, seemed to stamp the match in India's favour. Two overs later, South Africa lost Andile Simelane too to have them reeling at 86 for 7. But a final twist was lurking in the shadows. It began with Coetzee, he of Tarzan-like shoulder, swatting Arshdeep over long-off for a six. But India did not panic because it was presumed as no more than a lower-order hand's merry waft of the willow.

Then, though, it turned frightening with Stubbs drilling the last ball of the Arshdeep over for another four, before Coetzeee fetched a pair of fours off the first two balls of the Avesh Khan over. At this precise moment, India seemed to surrender all their hopes.



A two and a few singles reduced the target down to 13 off 12 balls. It was a target even the finickiest chasers in the game could not fumble. Stubbs, once touted to batting greatness, wrapped up the win with four boundaries in the 19th over.

In the end, it was a game South Africa were always favourites to win. Just that Chakravarthy' exemplary show of spin bowling offered India a fleeting glimpse of an unlikely victory. His wrong'un spun ragged into the right-hander. The hard length pushed batsmen onto the back-foot. But the extra skid beat them. The turn cramped them. To the wrong'uns owed the first three wickets. But all three were different, and this makes Chakravarthy difficult to counter. A slow and full one consumed Aiden Markram. It was delivered from wide of the crease, drifted in and spun back to beat his wayward slog.

The deception to Reeza Hendricks was different. The ball was shorter, quicker and spun back generously to beat his last-ditch jailbreak effort. The wicket offered India a slim ray of hope. South Africa, then, were strolling along at 44 for 2. Hendricks had just stroked him for a four, and then made a complete mess of the next ball. Even then, it seemed just a matter of time before South Africa played him out and found the runs from the others. The run-rate was within control and all it would have taken were a few lusty blows to chop the target down. With this intention, South Africa sent Marco Jansen up the order. In two overs, they had halved the target.

But then returned Varun, the last lease of India's hope. Fifth ball of the third over, he ejected Jansen with another wrong'un. It landed on a good length and turned away from him. The beanpole South African had little clue about the ball and blindly swung his bat. He missed the ball and was castled. India were back in the game. Then happened the 13th over, wherein he deceived Heinrich Klaasen and David Miller. The first ball was slow and tossed up, enticing Klaasen for the sledge-hammer drive through the extra cover. But the ball gripped off the surface, turned away a bit and flew off the outside half of his bat. He skied the ball to Rinku Singh at long off. Half the match seemed over then.

But the muscled frame of David Miller loomed. That World Cup tragic hero. Varun composed an inch-perfect first ball. The ball drifted into the left-hander but dropped fractionally shorter than he had presumed and spun away just a fraction to shave his off-stump. South Africa tottered to 66 for 6, seemingly a point of no return. But Coetzee and Stubbs orchestrated an unlikely victory.

The foundations though were laid by a throwback fielding performance. Axar Patel, the most fluent Indian batsman, was caught short of the crease at the non-striker's end. He backed away too far, alright, but the googly-spewing leg-spinner Nqabayomzi Peter reacted swiftly enough to ricochet a muscled straight drive from Hardik Pandya. Another left-hander, and equally placid, Tilak Verma drove uppishly but powerfully through extra cover only for David Miller's spidery right hand to stretch and pocket the ball. His departure ended a fourth-wicket stand that seemed to pull India out of trouble after a rocky start wherein they found the top three back in the dugout for 15 runs. India lost their way then and there.

# முதல் உலகப்போர் வீரர் நினைவுத்தூணில் கலெக்டர் குலோத்துங்கன் மலர் அஞ்சலி



**புதுச்சேரி, நவ. 11-**

முதல் உலகப்போர் நிறைவு பெற்றதன் 106வது நினைவு நாள் இன்று அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி கடற்கரைச் சாலையில் உள்ள போர் வீரர் நினைவுத் தூணில் புதுச்சேரிக்கான பிரான்ஸ் நாட்டுத் துணைத் தூதர் எட்டியென் ரோலண்ட்பியக், புதுச்சேரி அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் ஆகியோர் மலர் வளையம் வைத்து முதல் உலகப்போரின் போது உயிர்நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். முன்னதாக, இந்தியா, பிரான்ஸ் நாட்டின் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, இரு நாட்டு தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டு, மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

# வில்லியனூர் ஜி.என்.பாளையம் கிராமத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி

## எதிர்க்கட்சித் தலைவர் சிவா தொடங்கி வைத்தார்



**வில்லியனூர், நவ. 11-**

வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி, ஜி.என்.பாளையம் கிராமத்திற்கு வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூபாய். 31 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டில் அனைத்து குறுக்குச் சாலைகளும் கழிவுநீர் வாய்க்காலுடன் கூடிய சிமெண்ட் சாலைகளாக மாற்றும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சிவா கலந்துகொண்டு சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

இதில், வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, இளநிலைப் பொறியாளர் சத்திய நாராயணா, ஊர் முக்கியஸ்தர்கள் ராமசாமி, பத்மநாபன், திருநாவுக்கரசு, ஜெகதீசன், வீரபத்திரன், சந்துரு, மோகன், மணி, சுகந்தி, அன்பழகன், அன்பு, அண்ணாதுரை, நடராஜன், ஜெயராஜ், ஜெயக்குமார், ரகு, நாராயணன், பாஸ்கர், சந்தோஷ் மற்றும் திமுக பொதுக்குழு உறுப்பினர் செல்வநாதன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு.மோகன்தாசு, ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆறுமுகம், சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் ஹாலித், தொமுச பேரவைத் தலைவர் அங்காளன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், ஆதி திராவிட அணி துணை அமைப்பாளர் காளி, தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், முருகன், தங்கராசு, முத்து, வீரகண்ணு, கார்த்திகேயன், பாலு, அபிமன்னன், அன்பு, கோதண்டம், அனிஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திமுக பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்



**செஞ்சி, நவ. 11-**

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம்சிங்கவரம், பொன்பத்தி,மேல் எடையாளம்,ஊரணி தாங்கள், ஜெயங்கொண்டான், கோனை, அப்பம்பட்டுஆகிய ஊராட்சியின் பாக முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் அப்பம்பட்டில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட பிரிதிநிதி அய்யாதுரை அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட அமைத்தலைவரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளரும், செஞ்சி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக் கலந்துகொண்டு ஓட்டுச்சாவடி பாக முகவர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து மாநில இளைஞரணி துணை செயலாளரும், தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக் பேசுகையில்: கட்சி நிர்வாகிகள் 2026ஆம் ஆண்டு நடைபெறும் சட்டசபை தொகுதி தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். ஓட்டுசாவடி பாகம் முகவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வாக்காளர்கள் பட்டியலில் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். நடைபெற உள்ள வாக்காளர்கள் திருத்தம் சிறப்பு முகாமில் பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்களையும், புதியதாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும். முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல நிர்வாகிகள் அடிக்கடி கிராமத்தில் உள்ள மக்களை சந்தித்து அவர்களிடமிருந்து குறைகளை கேட்டு அறிந்து தலைமைக்கு தெரிவிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், துணைசேர்மன் ஜெயபால், மாவட்ட கவுண்சிலர், அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கண்ணன் ஆனந்த், ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# தொழில் வணிக சங்க கட்டிடம் திறப்பு



ஈரோடு மாவட்ட அனைத்து தொழில் வணிக சங்கங்களின் கூட்டமைப்பின் புதிய பொலிவுடன் அமைக்கப்பட்ட கட்டிடத்தை சக்தி மசாலா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் துரைசாமி, இயக்குநர் சாந்தி துரைசாமி ஆகியோர் குத்துவிளகேற்றி துவக்கி வைத்தனர். அருகில் கே.கே.பாலுசாமி, முன்னாள் எம்எல்ஏ தென்னரசு, கூட்டமைப்பின் தலைவர் வி.கே. ராஜமாணிக்கம், பொதுசெயலாளர் பி.ரவிச்சந்திரன், பொருளாளர் முருகானந்தம்.

# திருவம்பட்டு ஸ்ரீ குபேர விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேக விழா



**செஞ்சி, நவ. 11-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா திருவம்பட்டு ஊராட்சியில் உள்ள ஸ்ரீ குபேர விநாயகர் கோவில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.இதை முன்னிட்டு நேற்று மாலை மங்கல இசை, விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமம், பிரவேசபலி, யாகசாலை பிரவேசம், அங்குரார்ப்பணம், முதல் கால யாக பூஜைகள், இரவு 9 மணிக்கு மஹா பூர்ணாஹுதி, தீபாராதனை நடைபெற்றது.பின்னர் மங்கள இசையுடன் குரு வந்தனம், விஸ்வரூப தரிசனம், துவார பூஜை, வேதிக பூஜை, 108 மூலிகை ஹோமம், இரண்டாம் கால யாகசாலை பூஜைகள், நாடி சந்தானம், மாக பூர்ணஹூதி, மகாதீ பாரதனையும், யாத்ராதானமும், காலை 6.30 மணிக்கு கலசங்கள் புறப்பாடு நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து காலை 7 மணிக்கு ஸ்ரீ குபேர விநாயகர் கோவில் 28வது குரு மகா சன்னிதானம் சிவஸ்ரீ காசி விஸ்வநாத சிவாச்சாரிய சுவாமிகளால் கோபுர கலசத்திற்கு புனிதநீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் திருவம்பட்டு சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. விழாவுக்கான ஏற்பாடுகளை அனைத்து உபயதாரர்கள், விழா குழுவினர்கள், ஊர் பொதுமக்கள், இளைஞர்கள் செய்திருந்தனர்.

# ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் நமது மக்கள் கட்சி செயற்குழு தீர்மானம்



**புதுக்கோட்டை, நவ. 11-**

புதுக்கோட்டையில் நமது மக்கள் கட்சி மாநில செயற்குழு கூட்டம் நிறுவனத் தலைவர் சமத்துவ போராளி டாக்டர் மு.ராஜமாணிக்கம் தலைமையில் தனியார் தங்கும் விடுதியில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சரவண தேவா ,மாநில துணைத்தலைவர் எம்சிகே சின்னத்தம்பி யாதவ், மாநில மாணவரணி செயலாளர் ஜெயக்குமார், மாநில தொழிற்சங்க செயலாளர் ராசன் கல்யாணசுந்தரம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் இராம சுரேஸ்வர்மன் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் தமிழக அரசு ஜாதி வாரியான கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சரை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முத்தரையர் மக்களின் நீண்ட கால கோரிக்கையான 22-2-1996 நாளிட்ட அரசாணை எண்15யினை அமுல்படுத்தி இருபத்தி ஒன்பது பட்டப் பெயர்களில் வாழ்ந்து வருகின்ற முத்தரையர் அனைவருக்கும் ஒரே சீராக முத்தரையர் என்று சாதி சான்று வழங்கிட வேண்டும் என்று அறிவுறுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசை செயற்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது இந்த கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் விரைவில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் கவன யீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மையை நிரூபிக்கிற வகையில் தேர்தலில் போட்டியிடுவது என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது

ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும் பொழுது அனைத்து முத்தரையர் உட்பிரிவில் உள்ள அனைவரும் முத்தரையர் என்றே பதிவிட்டு முத்தரையர் இனத்தின் பெரும்பான்மையை நிருபிக்க வேண்டும் என செயற்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. கூட்டத்தில் டாக்டர் உடையப்பன், செல்வகுமார், திருச்சி ஏஎஸ்பி மணி திருநாவுக்கரசு ஆறுமுகம், தனராஜ் பாண்டியன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நிர்வாகிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தின் முடிவில் நமது மக்கள் கட்சி மாவட்ட இளைஞரணி செயலாளர் மாவட்ட தலைமை அலுவலக செயலாளர் செல்ல விக்னேஷ் மஞ்சாடியார் நன்றி கூறினார்.

# கணவரின் வலிப்பு மாத்திரையை சாப்பிட்ட பெண் சிகிச்சை பலனின்றி பலி

**காரைக்கால், நவ. 11-**

கணவரின் மாத்திரையை, மாற்றி சாப்பிட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். காரைக்கால் நிரவி சங்கரன் தோப்பு கிராமத்தில் வசிப்பவர் மீனாட்சி சுந்தரி. இவரது கணவர் மணிகண்டன். இவர்களது மூத்த மகள் சந்தியா (19) கடந்த 2023ஆம் ஆண்டு அதே பகுதியை சேர்ந்த பவித்ரன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பவித்திரனுக்கு குடிப்பழக்கம் இருந்ததாக கூறப்படுகிறது. அதனால் ஏற்பட்ட வலிப்பு நோய்க்கு தொடர்ந்து மாத்திரை எடுத்து வந்தார். இந்நிலையில், மாதவிலக்கு ஏற்படும் நேரத்தில், சந்தியாவுக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. கடந்த 9ம் தேதி இரவு அளவுக்கு அதிகமாக வயிற்று வலி ஏற்பட்டதால், கணவர் வலிப்பு நோய்க்கு பயன்படுத்தி வந்த மாத்திரையை, தன் வலி மாத்திரையாக கருதி மாற்றி உட்கொண்டதாக கூறப்படுகிறது.

இதனால் உடல் நலம் பாதிக்கப்பட்ட சந்தியாவை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். நேற்று விடியற்காலை சந்தியா சிகிச்சை பலனின்றி இறந்துபோனார். இதுகுறித்து மீனாட்சி சுந்தரி காரைக்கால் நிரவி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நாயன்மார் விழா



**சேலம், நவ. 11-**

சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் குமரகுரு சுப்பிரமணிய சுவாமி கோயில் பன்னிருதிருமுறைமன்றஅறக்கட்டளையின் சார்பில் 11ஆம் ஆண்டு அறுபத்துமூவர் நாயன்மார்கள், தொகை அடியார்கள், இன்ப மணிவாசகர், தெய்வச் சேக்கிழார் பெருமானுக்கு, நாயன்மார் விழா நடைபெற்றது. இவ்விழாவில் அருள்மிகு விநாயகர், வள்ளிதேவசேனா சுப்பிரமணியர், சொக்கநாதர், அங்கயற்கண்ணி அம்மை உள்ளிட்ட மூல திருமேனிகளுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. மேலும் பொள்ளாப்பிள்ளையார், அம்மையப்பர் சேயிடைச் செல்வர், நாயன்மார்கள், தொகை அடியார்கள், இன்ப மணிவாசகர், தெய்வச்சேக்கிழார் பெருமான் எழுந்தருளும் அருட் திருமேனிகளுக்கு பெருந்திருமஞ்சனம் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின்போது திருமுறை இன்னிசை வழங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பேரொளி வழிபாடு, அன்னம் பாலிப்பு நடைபெற்றது. மாலையில் அறுபத்துமூவர் திருவீதி உலா நடைபெற்றது.

இதில் அறங்காவலர் குழு தலைவர் சோமசுந்தரம், செயல் அலுவலர் விமலா, அறங்காவலர்கள் செல்வம், முருகன், கோயில் அர்ச்சகர்கள் ரமேஷ், குப்புசாமி, திருமுருகன் மற்றும் தலைவர் சிங்காரவேல், துணைத் தலைவர்கள் பிரகாசம், சுந்தரவேல், செயலாளர் அருள் பிரகாசம், துணை செயலாளர் விக்னேஷ், பொருளாளர் சிவாஜி, கௌரவ ஆலோசகர் ஆடிட்டர் கிருஷ்ணன், அரன்பணி விழுது கோபி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மலர் தூவி உபரி நீரை வரவேற்ற மக்கள்



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் ஒன்றியம் தென்பெண்ணை ஆற்றில் இருந்து சித்திலிங்கமடம் அணைக்கரை ஆமூரான் வாய்க்கால் வழியாக உபரி நீரானது பல ஆண்டுகளுக்குப் பிறகு ஜி.கொளத்தூர் கிராமத்தில் உள்ள பெரிய ஏரிக்கு வந்து சேர்ந்தது .இதனை வரவேற்கும் விதமாக கொளத்தூர் கிராம மக்கள் மலர் தூவி உபரி நீரை வரவேற்றனர்.

# Gambhir heaps confidence on KL Rahul to step in as opener; Bumrah will be skipper if Rohit misses

**New Delhi, Nov. 11-**

With just 11 days to go for India's first Test against Australia in the Border-Gavaskar Trophy, coach Gautam Gambhir expressed confidence in KL Rahul to step in as opener, should Rohit Sharma miss out for personal reasons.



Stressing that things weren't clear over whether captain Rohit Sharma will be available for that opening match in Perth, Gambhir at the departure press conference said, "Look, at the moment there is no confirmation but we guys will let you know exactly what the situation will be. Hopefully, Rohit is going to be available, but everything you want to know, you will before the start of the series," Gambhir said at the pre-departure press conference in Mumbai, adding that Jasprit Bumrah will lead the side should Rohit miss the opener.

Rohit is reportedly set to miss the first of the five-match Test series due to personal reasons.

The big question: if not Rohit, then who will open?

Gambhir reckons India have a back-up in KL Rahul, and even if bruised by Scott Boland, the experienced pro can summon the temperament when required. "There is KL (Rahul) there. There's Abhimanyu Easwaran there. So, we will take a call closer to the first Test match if Rohit is not available. It's not that there are no options. There are quite a lot of options in the squad," he stressed.

KL Rahul who was believed to be auditioning for a middle-order role, could now be a back-up opener. And Gambhir said that's down to his versatility. "That is the quality of the man. That he can actually bat at the top of the order. He can bat at No. 3. And he can actually bat at No. 6 as well. So, you need quite a lot of talent to be doing these kind of jobs as well," he explained.

Gambhir further emphasised Rahul's utility to the side across formats and expressed confidence in the all-purpose cricketer to deliver if summoned. "He's kept wickets in One-Day format as well. So, imagine how many countries have players like KL who can actually open the batting and can bat at No. 6 as well? I feel that if need be, he can do the job for us. Especially if Rohit is not available for the first Test."

# விசைத்தறி நெசவாளர்களுக்கு வரி விலக்கு எம்எல்ஏவிடம் கோரிக்கை மனு

**சங்கரன்கோவில், நவ. 11-**

சங்கரன்கோவில் விசைத்தறி நெசவாளர்களுக்கு வரி விலக்கு கோரி ராஜா எம்எல்ஏவிடம் மாஸ்டர் வீவர் ஸ் சங்கத்தினர் கோரிக்கை மனு அளித்தனர். வணிகவரி கட்டிட வரி விதிப்பு விதிக்கக்கூடாது எனவும் மாஸ்டர் வீவர்ஸ் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம் மாஸ்டர் வீவர்ஸ் சங்கத் தலைவர் என்கேஎஸ் டி சுப்பிரமணியன், துணைத் தலைவர் பிஜிபி ராமநாதன், செயலாளர் டிஎஸ்ஏ சுப்பிரமணியன், பொருளாளர் முத்து, சங்கர நாராயணன் ஆகியோர் கொண்ட குழுவினர் கோரிக்கை மனு அளித்தனர். கோரிக்கையில் சங்கரன்கோவிலில் 5000க்கும் மேற்பட்ட விசைத்தறி தொழில்கூடங்கள் உள்ளன.



இதில் குடிசைத் தொழிலாகவே வீடுகளில் குடியிருந்து கொண்டு உண்டு உறைவிடம் தொழில் கூடமாக கொண்டு அரசு வழங்கும் இலவச மின்சாரத்தில் ஒரு விசைத்தறி, இரண்டு விசைத்தறி வைத்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடிசை தொழில் செய்து வாழ்க்கை பிழைப்பை நடத்தி வருகின்றனர். தற்போது ஆறு சதவிகிதம் வரி உயர்வு அதிகரித்துள்ளது. வணிக வரிவிதிப்பு கட்டிட வரிவிதிப்பு விதிப்பதை தவிர்க்கும் படியும் விசைத் தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் எம்எல்ஏ நடவடிக்கை மேற்கொண்டு விசைத்தறி நெசவாளர்களுக்கு வரி விதிக்க கூடாது என மனு அளித்துள்ளனர். மனு அளிக்கும் நிகழ்வில் சங்க நிர்வாகிகள் குப்பையாண்டி சுப்பிரமணியன், கார்த்திக், சங்கர், சுப்பிரமணி, முத்தையா உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# திமுக பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம்

**திருவெண்ணெய்நல்லூர், நவ. 11-**

திருக்கோவிலூர் சட்ட மன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய் நல்லூரில் நகர திமுக சார்பில் வாக்குச்சாவடி பாக முகவர்களுக்கான(பி.எல்.ஏ 2) ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமை தாங்கினார். மேற்கு ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர். விசுவநாதன், மாவட்ட துணை செயலாளர் கற்பகம், வழக்கறிஞர் தங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்



கார்த்திகேயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வருகின்ற 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தல் குறித்து வாக்குச்சாவடி பாக முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இதில் பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய சேர்மன் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜோதி, பாக முகவர்கள்(பி.எல்.ஏ 2) செந்தில் முருகன், விஜயபாபு, தில்லை.காமராஜ், சதாம், பாக்கியராஜ், சுந்தரமூர்த்தி, ரமேஷ், நகர நிர்வாகிகள், நகர துணை செயலாளர்கள் சத்யநாராயணன், காந்திமதி வெங்கடேசன், வழக்கறிஞர் கார்த்திகேயன், நகர இளைஞரணி சுரேஷ், முன்னாள் மாணவரணி அன்பழகன், வார்டு செயலாளர்கள் வெற்றிவேல் செழியன், யாசர் அராபத், சுரேஷ், அய்யனார், கிருபாபுரி, அருள், சையத் நாசர், ஷாஜகான், ரமேஷ், மகேந்திரன், தண்டபாணி, ரமேஷ், ரமேஷ், பேரூராட்சி கவுன்சிலர்கள் பாபு, ரஹ்மத்துன்னிஷா ஷாஜகான், அறங்காவலர் குழு தலைவர் ராஜாராம், முன்னாள் நகர செயலாளர் செல்வம், ஒன்றிய நிர்வாகிகள் ஒன்றிய பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நிர்மல்ராஜ், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் வெங்கடேசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் சி.டி.பாலு, மாவட்ட விளையாட்டுகள் மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சிறுமதுரை தேவா, உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# இலவச கண் சிகிச்சை முகாம்

**சேலம், நவ. 11-**

சேலம் மாவட்டம் அயோத்திய பட்டணம் ஒன்றியத்தில் உள்ள, சுவாமி கல்வி நிறுவனங்கள் மற்றும் சேலம் மெஜஸ்டிக் அரிமா சங்கம் இணைந்து மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் சுவாமி மஹால் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த இலவச கண் சிகிச்சை முகாமை சுவாமி கல்வி நிறுவனங்களின் சேர்மன் சுவாமிநாதன் தலைமையிலும், சேலம் மெஜஸ்டிக் அரிமா சங்கத் தலைவர் கார்த்திக் முன்னிலையில் முகாமினை துவக்கி வைத்தார்கள். இந்த முகாமில் பார்வை குறைபாடு உடையவர்களுக்கு கண்ணாடிக்கான விழி, ஒளி, பரிசோதனை நடைபெற்றது. இலவச கண் சிகிச்சை முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு கண் பரிசோதனை செய்து மருத்துவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். இந்த முகாமில் திரளான பொதுமக்கள்



கலந்துகொண்டு பயன்பெற்றனர். இந்த இலவச கண் சிகிச்சை முகாமினை சுவாமி கல்வி நிறுவனங்கள் மற்றும் சேலம் மெஜஸ்டிக் அரிமா சங்க நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# காரைக்காலில் ஆப்ரேஷன் திரிசூலம் படி குற்றவாளிகள், ரவுடிகளிடம் போலீசார் விசாரணை

**காரைக்கால், நவ. 11-**

காரைக்காலில் நேற்று அதிகாலை முதல் ஆப்ரேஷன் திரிசூலம் படி போலீசார் முக்கிய குற்றவாளிகள், ரவுடிகளை பிடித்து விசாரணை செய்த சம்பவம் பரபரப்பை காரைக்காலில் பெரும் ஏற்படுத்தியுள்ளது.

புதுச்சேரியில் முக்கிய குற்றவாளிகள் மற்றும் ரவுடிகளின் நடமாட்டங்களை கண்காணிப்பதற்காக 'ஆப்ரேஷன் திரிசூலம்' என்கின்ற திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக காரைக்கால் மாவட்ட காவல்துறை சார்பில், போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியன் தலைமையில், 'ஆப்ரேஷன் திரிசூலம்'



திட்டத்தில், நேற்று அதிகாலை முதல், நகர் பகுதியில் உள்ள முக்கிய குற்றவாளிகள் மற்றும் ரவுடிகள் வீடுகளில், 100க்கு மேற்பட்ட போலீசார், அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்பொழுது அவர்களது வீட்டில் ஆயுதங்கள், போதைப் பொருட்கள் மற்றும் குற்றசம்பவங்களுக்கு பயன்படுத்தும் பொருட்கள் பதுக்கி வைக்கப் பட்டுள்ளதா சோதனை செய்யப்பட்டது.

இதேபோல் மாவட்டத்தில் பிறதொகுதிகளிலும், போலீசார் அதிரடி சோதனைப்பணியில் ஈடுபட்டனர். சோதனையின் முடிவில், 22க்கும் மேற்பட்ட முக்கிய குற்றவாளிகள் மற்றும் ரவுடிகளிடம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு எச்சரித்து விடுவித்தனர்.

## சுயமரியாதையுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ

# மக்கள் நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதல்வர்

## தூத்துக்குடி மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



தூத்துக்குடி, நவ. 11-

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்(2.0)என்பது ஊரக வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டமாக தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராமப் புறத் தொழில்களை ஊக்குவித்தல், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல், வேலைவாய்ப்பினை உருவாக்குதல், மகளிர் தொழில்முனைவோர் மூலம் கிராமப்புறங்களில் நிலையான தொழில் நிறுவனங்களை உருவாக்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டில் 31 மாவட்டங்களிலுள்ள 120 வட்டாரங்களில் உள்ள 3994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இதில் தூத்துக்குடி மாவட்டத்தில் 4 வட்டாரங் களிலுள்ள (சாத்தான்குளம் தூத்துக்குடி ஆழ்வார்திருநகரி கருங்குளம்)105 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், தூத்துக்குடி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு பல்வேறு மானியமாக தொழிற் கடனுதவி வழங்கப்படுகிறது. அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு ஆட்சிப்பொறுப்பேற்ற நாளான 07.05.2021 முதல் 31.10.2024 வரை வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ், ஒரு ஊராட்சியில் குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் அதாவது வாழை, வெற்றிலை, காய்கறிகள் உள்ளிட்ட குறிப்பிட்ட விளைபொருட்களை உற்பத்தி செய்துவரும் விவசாயிகளை 30 முதல் 150 வரை ஒருங்கிணைத்து 88 உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு குழுவிற்கு தலா ரூ.75,000 வீதம் முழுமானியமாக ரூ.66 லட்சம் துவக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது. அதுபோன்று கைவினைப்பொருட்கள் உற்பத்தி செய்துவரும் நபர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக 10 முதல் 30 வரை ஒருங் கிணைத்து 24 தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒரு குழுவிற்கு தலா ரூ.75,000 வீதம் முழுமானியமாக ரூ.18 லட்சம் துவக்க நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தியாளர் குழுக்களின் உற்பத்தி பொருட்களை மதிப்புக்கூட்டுப்பொருட்களாக மாற்றி வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக உற்பத்தியாளர் குழுக்களை ஒருங்கிணைத்து 02 உற்பத்தி நிறுவனம் அமைக்கப்பட்டு முழுமானியமாக ரூ.46.50 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

கிராமப்புற இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் வேலைவாய்ப்பு உருவாக்கும் விதமாக 80 சமுதாய திறன் பள்ளி உருவாக்கப்பட்டு இதுவரை 1685 இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பயிற்சி பெற்று பயன்பெற்றுள்ளனர். அதேபோன்று ஒவ்வொரு கிராமங்களில் உள்ள விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி குறைந்த செலவில் சாகுபடி செய்து, அதிக இலாபம் ஈட்ட வேண்டுமென்ற நோக்கில் 206 சமுதாய பண்ணைப் பள்ளி உருவாக்கப்பட்டு இதுவரை 6214 விவசாயிகள் பயிற்சி பெற்று பயன்பெற்றனர். கிராமப்புற ஊராட்சிகளில் தொழில் முனைவோரை மேம்படுத்தும் விதமாக இணை மானியத் திட்டத்தின்கீழ் தொழில் முனைவோர்க்கு 30 சதவீதம் மானியத்துடன் தொழில் கடன் வழங்கப்படுகிறது. அதன்படி 176 தொழில்முனைவோர்களுக்கு மானியமாக ரூ.1.73 கோடி தொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது. தொழில் கடனுதவி பெற்ற தொழில்முனைவோர்களுக்கு தொழில் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்படுகிறது. கிராமப்புறங் களில் சுயதொழில் செய்துவரும் மகளிர்களுக்கு ரூ.30,000 முதல் ரூ.70,000 வரை தொழில் கடனாக வழங்கப்படுகிறது. அதன்படி 271 மகளிர்களுக்கு ரூ.1.51 கோடி தொழில் கடனுதவி வழங்கப்பட் டுள்ளது ஆகமொத்தம் 8006 பயனாளிகளுக்கு ரூ.1,30,50,000 முழு மானியமாகவும், 176 தொழில் முனைவோர்களுக்கு 30 சதவிகித மானியத்தில் ரூ.1,73,00,000 தொழில் கடனுதவிகளும், 271 மகளிர்களுக்கு ரூ.1,51,00,000 தொழில் கடனுதவிகளும், சமுதாய திறன் பள்ளி மற்றும் சமுதாய பண்ணைப் பள்ளி மூலமாக 7700 பயனாளி களுக்கு ரூ.2,29,66,200 செலவில் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது.




தொழில் திறன் பயிற்சியின் மூலமாக சுய வேலைவாய்ப்பு பெற்ற சுகன்யா ஆர்வமுடன் கூறுகையில், நான் கருங்குளம் வட்டாரம் புளியங்குளம் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறேன். நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு நபர்களும் தனித்தனியாக சுயதொழில் செய்து வருகிறார்கள். நான் மட்டும் வீட்டில் உள்ள வேலைகளை பார்த்து வந்தேன். எனக்கும் ஏதாவது ஒரு தொழில் கற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் அதற்கு திருநெல்வேலி மற்றும் திருவைகுண்டம் போன்ற இடங்களுக்குச் சென்று தான் கற்றுக்கொள்கின்ற சூழ்நிலை இருந்தது. இந்த சமயத்தில் தான் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் பனைஒலைகளைக் கொண்டு கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழிலை எனது ஊரிலே கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இப்பயிற்சியில் பூஜை கூடை, காய்கறிக் கூடை, பூங்கொத்து, மாலை போன்றவற்றை பனைஒலைகள் மூலமாக கைவினைப்பொருட்கள் தயாரிக்க கற்றுக்கொண்டேன். தற்போது ஜிக்ஷிஷி நிறுவனத்திற்கு சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்கும் வகையில் பனை ஓலையிலான வண்ணப்பொட்டி மற்றும் பூங்கொத்து பொருட்கள் வழங்க கொள்முதல் ஆணை பெறப்பட்டு தொடர்ந்து வழங்கி வருகிறேன். இதன் மூலம் ஒரு மாதத்திற்கு ரூபாய் 6000 வருமானம் ஈட்டி வருகிறேன். என்னைப்போன்ற ஒவ்வொரு பெண்களும் சமுதாயத்தில் சுயமரியாதையுடனும் தன்னம்பிக்கையுடனும் வாழ வேண்டுமென்ற அடிப்படையில் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங் களை தொடர்ந்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது சார்பாகவும், எனது குடும்பம் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்



சுயதொழிலை மேம்படுத்தும் விதமாக தொழில் கடன் பெற்ற சரவணன் மகிழ்ச்சியுடன் கூறுகையில், நான் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டாரம் சேர்வைக்காரன்மடம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் 25 வருடமாக அலங்கார மீன் பண்ணை நடத்தி வருகிறேன் மற்றும் அலங்கார மீன் பண்ணை வளர்ப்புப் பயிற்சியும் கொடுத்து வருகிறேன். நான் அலங்கார மீன் விற்பனை இந்தியா முழுவதும் செய்து வருகிறேன். கடந்த 2023 ஆம் வருடம் டிசம்பர் 18ந்தேதி பெருமழை வெள்ளத்தினால் எனது மீன் பண்ணை முற்றிலுமாக சேதம் அடைந்து பெருநஷ்டம் ஏற்பட்டது.

அப்போது எங்க பகுதியில் தொழில்சார் சமூக வல்லுநராக பணியாற்றிய சண்முகப்பரியாவை தொடர்புகொண்டு எனது மீன் பண்ணையின் பாதிப்பு குறித்து எடுத்துக்கூறினேன். அப்பதான் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் மூலம் இணை மானியநிதி திட்டத்தின்கீழ் தொழில் கடன் வேண்டி விண்ணப்பம் செய்தேன். பிறகு திட்டப் பணியாளர்கள் மற்றும் வங்கியாளர்கள் நேரில் ஆய்வு செய்து, தேவையான ஆவணங்களை கேட்டறிந்து சரிபார்த்தார்கள். அதன்பிறகு தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.30,00,000 தொழில் கடனாகப் பெற்றேன். அதில் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக ரூ.9,00,000 மானியம் பெற்று இப்போது தொழிலில் மறுமலர்ச்சி கண்டு அதிக லாபத்துடன் தொழில் நடத்தி வருகிறேன். ஏற்கனவே 5 நபர்களுக்கு எனது பண்ணையில் வேலைவாய்ப்பு கொடுத்து வந்தேன். தற்போது இணை மானிய நிதியின் மூலம் நிதி பெற்றதன் மூலம் கூடுதலாக 5 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறேன். மழை வெள்ளத்தின் மூலம் வாழ்வாதாரம் இழந்த எனக்கு, வெளிச்சம்போல் எனது வாழ்க்கையில் ஒளியேற்றிய மகத்தான திட்டமான வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தை செயல் படுத்திய தமிழ்நாடு முதலமைச் சருக்கு எனது சார்பாகவும், எனது குடும்பம் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.



தொகுப்பு:-
**நவீன்பாண்டியன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**முத்துக்குமார்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்.

## பொதுமக்களிடம் கோரிக்கை மனு பெற்ற ஆட்சியர்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

## நலத்திட்ட உதவிகள் வழங்கல்



வேலூர் மாவட்டம், கீ.வ.குப்பம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்களில் பெறப்பட்ட மனுக்களில் 568 பயனாளிகளுக்கு ரூ.3.75 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் வழங்கினார்கள். அருகில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007



# ராணிப்பேட்டையில் விளையாட்டு வளாகம் துணை முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்

# ‘உலக நாயகன்’ என அழைக்க வேண்டாம்–கமல் ஹாசன்



# தங்கம் விலை திடீர் குறைவு

மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 11-11-2024 திங்கள்கிழமை •வெளியூர்: 12-11-2024 செவ்வாய்க்கிழமை • பக்கம் 6 • ரூ.600 காசுகள்